இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 28-05-2025

# டெல்லியில் ஒலித்த உரிமைக்குரல்

பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய அமைச்சர்கள், அனைத்து மாநில முதலமைச்சர்கள் பங்கெடுத்த கூட்டத்தில் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டின் உரிமைக் குரலை ஓங்கி ஒலித்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

நிதி ஆயோக் கூட்டத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் செல்கிறார் என்றதும், கொத்தடிமை பழனிசாமிக்கு முதுகு வேர்த்துவிட்டது. ‘தான் திருடி பிறரை நம்பாள்’ என்பதைப் போல அதற்கு பல்வேறு கற்பனையான காரணங்களை பழனிசாமி அவிழ்த்துவிட்டார். பிரதமர் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்துக்கு ஒரு மாநில முதலமைச்சர் செல்வதற்கு அரசியல் நோக்கம் தேவையில்லை. நிர்வாக நோக்கம் இருந்தால் போதும். வழக்கமாக நடைபெறும் கூட்டத்துக்குச் செல்வது வழக்கமான நடைமுறைதான். அதன் அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றார்கள்.

இக்கூட்டம் நடப்பதற்கு முன்னதாக காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர்களான சோனியா, ராகுல் ஆகிய இருவரையும் சென்று சந்தித்தார் முதலமைச்சர் அவர்கள். பழனிசாமி சொல்வது பச்சைப் பொய் என்பதை இதுவே காட்டியது. பிரதமருடன் சமாதானம் பேசப் போயிருந்தால் அவருக்கு கோபம் வரவழைக்கும் வகையில் சோனியா, ராகுல் ஆகியோரை முதலமைச்சர் சந்திப்பாரா? இந்த அடிப்படை அறிவு கூட இல்லாத தற்குறிதான் பழனிசாமி என்பதை தமிழ்நாடு மீண்டும் உறுதி செய்தது.

நிதி ஆயோக் கூட்டத்திலும் தமிழ்நாட்டுக்கான கோரிக்கைகள் சிலவற்றை மட்டும் வைத்து விட்டு அமைதியாக வில்லை முதலமைச்சர் அவர்கள். ஒன்றிய அரசுக்கு பாராட்டுப் பத்திரம் வாசிக்கவில்லை முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டுக்கான உரிமைக்குரலை, பா.ஜ.க. தலைமைக்கு புரியும் வகையில் எடுத்துரைத்து விட்டு வந்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். இந்தியாவின் எந்த மாநில முதலமைச்சராவது இத்தகைய உரிமைக் குரலை எழுப்பி இருப்பார்களா என்பது சந்தேகமே!

தமிழ்நாடு எந்தெந்த வகையில் எல்லாம் கடந்த நான்காண்டு காலத்தில் முன்னேறி இருக்கிறது என்பதை பட்டியலிட்ட முதலமைச்சர் அவர்கள், இதற்குக் காரணம் சமூகநீதிதான் என்பதையும் எடுத்துக்காட்டி இருக்கிறார். **“சமத்துவம் மற்றும் சமூகநீதி அடிப்படையில், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சிதான் எங்களுடைய தொலைநோக்குப் பார்வை! “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற அந்தக் குறிக்கோளுக்குப் பெயர்தான் திராவிட மாடல்! இதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் காரணம்”** என்பதை தொடக்கத்திலேயே எடுத்துரைத்திருக் கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**“இந்தியாவின் இலக்கான 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தில், எங்களது பங்களிப்பு வலுவாக இருக்கும்” என்றும் உறுதி அளித்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டுக்கு என்னென்ன திட்டங்கள் வேண்டும் என்பதை தெளிவுபடுத்தி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

1. ஒரு புதிய நகர்ப்புற மறுமலர்ச்சித் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

2. கங்கையைச் சுத்தப்படுத்தும் திட்டத்தை போல காவிரி, வைகை, தாமிரபரணிக்கும் புதிய திட்டம் தேவை.

3. இதுபோன்ற நதி நீர் திட்டங்களுக்கு தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் பெயர் சூட்ட வேண்டும்.

4. பள்ளிக் கல்வித் துறைக்காக தர வேண்டிய 2200 கோடியை உடனடியாக விடுவிக்க வேண்டும். ஒரு தலைப்பட்சமான நிபந்தனைகளை வலியுறுத்தாமல் நிதியை விடுவிக்க வேண்டும். - ஆகிய முக்கியமான கோரிக்கைகளை பிரதமர் முன்னிலையில் முதலமைச்சர் அவர்கள் வைத்து விட்டு, இன்றைய நிலைமையைச் சொல்லி இருக்கிறார்கள்.

* மாநிலத்துக்கு கிடைக்க வேண்டிய, தரப்பட வேண்டிய நிதியானது எப்போதும் போராடி - வாதாடி - வழக்குப் போட்டு பெற வேண்டிய நிலைமையில் இருப்பது கூட்டாட்சி இந்தியாவுக்கு அழகல்ல. இது மாநிலத்தின் வளர்ச்சியையும் பாதிக்கும்; இந்தியாவின் வளர்ச்சியையும் பாதிக்கும்.

* 15-ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி மாநிலங்களுக்கு 41 விழுக்காடு நிதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆனால் கடந்த 4 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 33.16 விழுக்காடு மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது.

* ஒன்றிய அரசும் - மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்திடும் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்குத்தொகை, தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இது மாநில அரசுகளுக்குப் பெரும் சுமையை ஏற்படுத்துகின்றன.

* ஒன்றிய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வின் பங்கு 50 விழுக்காடு உயர்த்தப் படுவதுதான் முறையானதாக இருக்கும்.

- இதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுப்பிய உரிமைக்குரல் ஆகும்.

**“தற்சார்புடனும், தனித்துவமான அடையாளங்களுடனும் ஒவ்வொரு மாநிலமும் செழித்து வளரும்போதுதான் ஒன்றுபட்ட வலிமையான இந்தியத் திருநாடு உலக அரங்கில் உயர்ந்து நிற்கும்! அதற்கு தமிழ்நாடு எப்போதும் துணை நிற்கும் என்று உறுதியளிக்கிறேன்.” என்பதுதான் ஒன்றிய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த மகத்தான பாடம் ஆகும்.**

கடந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில், “மாநிலங்கள் மக்களுடன் நேரடியாக இணைந்திருப்பதால், இந்தத் தொலைநோக்குப் பார்வையை அடைவதில் மாநிலங்கள் தீவிர பங்கு வகிக்கின்றன” என்று பிரதமர் பேசியிருந்தார். இதனை நினைவூட்டியே பேசினார் முதலமைச்சர் அவர்கள். **“பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கு, கூட்டுறவு கூட்டாட்சி என்பது அவசியமான அடித்தளமாகும். எனவே, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் தங்கள் வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு, ஒன்றிய அரசு பாகுபாடின்றி ஒத்துழைப்பு தர வேண்டும்”** என்று உரிமைக்குரலை ஓங்கி ஒலித்துள்ளார் முதலமைச்சர்.

இதில் ஒரு சொல்லைக் கூடச் சொல்லும் முதுகெலும்பு பழனிசாமிக்குக் கிடையாது. ‘வெள்ளைக் கொடியோடு செல்கிறார்’ என்று பழனிசாமி சொன்னார். **‘வெள்ளைக் கொடியுடனும் வரவில்லை, காவிக் கொடியுடனும் வரவில்லை’** என்று கிண்டலாகச் சொல்லிவிட்டார் முதலமைச்சர். உண்மையில் உரிமைக்கொடியை நாட்டினார் முதலமைச்சர்.

●●

## தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. பொதுக்குழு கூடுகிறது!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 1-6-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் தி.மு.க. பொதுக் குழுக் கூட்டம், மதுரை, உத்தங்குடி, “கலைஞர் திடலில்” நடைபெறும்.

அதுபோது பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : 1. கழக ஆக்கப்பணிகள்**

**2. தணிக்கைக்குழு அறிக்கை**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்: 3.5.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

**குறிப்பு : தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் அந்தந்த மாவட்டத்திற்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் - மாநில நிர்வாகிகள் - அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கூட்டம் நடைபெறும் அரங்கத்திற்கு வெளியே தங்கள் மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள ‘மினிட்’ புத்தகத்தில் கையொப்பமிட்டு, தங்களுக்குண்டான ‘பேட்ஜ்’-ஐ பெற்றுக் கொண்டு, காலை 9.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் மாவட்ட வாரியாக அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

## ஜூன் 11–ந் தேதியன்று

# சேலம் வருகை தரும் முதல்வருக்கு பிரம்மாண்ட வரவேற்பு!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*சேலம், மே 28 -*

சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் 26.05.2025 - திங்கட்கிழமை சேலம், 5 ரோட்டில் உள்ள கே.எம்.பி. திருமண மண்டபத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ.வேலு தலைமையிலும், சுற்றுலாத்துறை அமைச்சர், சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்செல்வகணபதி மற்றும் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி. பேரூர்ச் செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், துணை அமைப்புகளான அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**முதல்வருக்கு பிரம்மாண்ட வரவேற்பு!**

எத்தனை, எத்தனை எதிரிகள் முளைத்தாலும், எத்தனை, எத்தனை இன்னல்கள் விளைத்தாலும், அத்தனையையும் தூளாக்கி விட்டு, பேரறிஞர் அண்ணாவை போல் அமைதி காத்திடும் நம் உயிரினும் மேலான “கழகத் தலைவர்” அவர்கள் எக்கணமும், எப்பொழுதும் இத்த தமிழகத்தின் மக்களையே அவர் நெஞ்சம் நினைத்திருக்க, தமிழக மக்களில் ஒருவராகவும், நம்மில் ஒருவராகவும் நம் முதல்வர் திகழ்கிறார்.

பேரறிஞர் அண்ணா அன்றே சொன்னார் இந்தியா என்பது ஒரு நாடு அன்று, இது ஒரு துணைக்கண்டம் என்று, அதை இன்று அகில இந்தியாவுக்கும் எடுத்துச் செல்கிறார் நம் போற்றுதலுக்குரிய கழகத் தலைவர் அவர்கள். கழகத் தலைவர் அவர்களால் மற்ற மாநில மக்களும் இன்று விழிப்புணர்வு பெறுகின்றனர்.

மாநிலங்கள் தம் உரிமைகளைப் பெறவும், கூட்டாட்சி குடியரசு மலரவும் அவர் எழுப்பிடும் குரல் நாடு முழுவதும் எதிரொலிக்கிறது. அத்தகைய பெருமைமிகு தலைவர், மக்களின் முதல்வர் அவர்கள் நம் சேலம் மாவட்டத்திற்கு 11.06.2025 புதன்கிழமை வருகை தர உள்ளார்கள். அவர் வருகை நம் மண்ணுக்கு பெருமை, அவரை சேலம் விமான நிலையம் முதல் மேட்டூர் வரை சேலம் மத்திய மாவட்டக் கழகமும், சேலம் மேற்கு மாவட்டக் கழகமும் இணைந்து “படை பெருத்ததால் பார் சிறுத்ததோ” என்று மாற்றாரும் வியக்கும் வண்ணம் பிரம்மாண்டமாக அலைகடலென ஆர்ப்பரித்து கழகத் தோழர்களும், பொதுமக்களும் சிறப்பான வரவேற்பளிப்பது என்றும், அதுபோல் சேலம் கிழக்கு மாவட்ட கழக தோழர்களும், சேலம் சேகோசர்வ் தொடங்கி சேலம் அரசு மருத்துவ கல்லூரி வரை பிரம்மாண்ட வரவேற்பு அளிக்க வேண்டுமென்றும்,

அனைத்து நிகழ்ச்சிகளிலும் சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டக் கழக, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞரணி, தகவல் தொழில்நுட்ப அணி, மாணவர் அணி, மகளிர் அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, இலக்கிய அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப்பேரவை, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, சுற்றுச்சூழல் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மகளிர் தொண்டர் அணி, மருத்துவ அணி, மீனவர் அணி, வர்த்தக அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைத்து அணிகளிலும் உள்ள தோழர்கள் ஒருங்கிணைந்து சிறப்பிப்பது என்றும் தீர்மானிக்கப் படுகிறது.

**கலைஞர் பிறந்தநாள் கோலாகலமான கொண்டாட்டம்!**

“கலைஞர்” தமிழகம் கண்ட நான்கெழுத்து மந்திரம்! தமிழ் மக்களின் உயிர்த் துடிப்பு! இந்தியா கண்ட அரசியல் அதிசயம்! “உடன் பிறப்பு” என்ற ஒற்றை சொல்லால் சாதி, இனம், மதம், மொழி என்ற பேதங்களை ஒழித்த நல்ல உறவு கண்ட தலைவர்! பேச்சால், எழுத்தால், உரையாடல் வீச்சால் உள்ளங்கவர்ந்த அறிவாற்றல்! நின்ற தேர்தல்களில் வெற்றி வாகை சூடிய தலைவர்! தன்னலமற்ற தலைமைப் பண்பு! 5 முறை ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதெல்லாம் தீட்டிய பல்வேறு திட்டங்களில் வாழுகின்ற பெருமை! மனிதநேயம் காத்திட்ட மகத்தான பண்பு! தூய்மையும் வாய்மையும் நிரம்பிய நெஞ்சுரம்! “வாருங்கள் எல்லோரும் மொழிப்போருக்கு சென்றிடுவோம் வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டியடிப்போம்” என்று அரைக்கூவல் விடுத்த மொழி உணர்வு!

தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்ற தண்டவாளத்தில் தலைவைக்கத் தயங்காத வீரம்! எண்பது ஆண்டு பொதுவாழ்வின் சாதனைகளால் மறைந்த பின்னரும் வாழுகின்ற மகத்துவம்! முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய 14வது வயதில் பொதுவாழ்வில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு திராவிட கொள்கையை ஏற்று கொண்டவராய், பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தமிழர்களின் உரிமைக்காக, சுயமரியாதை சிந்தனையோடு தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து, மாநில சுயாட்சி, சமூக நீதி, சமத்துவம், பெண்ணுரிமை ஆகியவைகளைக் காத்திட அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமூகத்தில் பின்தங்கிய வர்கள், மாற்றுத்திறனாளிகள், சமூகத்தால் ஒடுக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தவர்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அனைவரையும் பாதுகாக்கும் பாதுகாவலராக இயக்கத்தின் கருவாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஜூன் 3ம் நாள் 102 வது பிறந்த நாள் விழாவினை சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மிக எழுச்சியுடன் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட வேண்டுமெனவும்,

அதனையொட்டி சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழகங்கள் சார்பாகவும், ஊராட்சிகள் சார்பாகவும், என்றென்றும் நம்முடன் வாழுகின்ற கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட வேண்டு மெனவும், தோரணங்கள் அமைத்து,

ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள், மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல் என அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மாணவர் அணி, மகளிர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, சுற்றுச்சூழல் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மகளிர் தொண்டர் அணி, மருத்துவ அணி, மீனவர் அணி, வர்த்தக அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சிகளை எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என சேலம் மத்திய, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




சேலம் மாவட்டத்திற்கு ஜூன்.11,12 என 2 நாட்கள் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சுற்றுப்பயணம் செய்ய இருப்பதையொட்டி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகக் கூட்டம் சேலத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைதுறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு பேசினார். மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர் இரா.இராஜேந்திரன் (சேலம் மத்திய), எஸ்.ஆர்.சிவலிங்கம் (சேலம் கிழக்கு), டி.எம்.செல்வகணபதி எம்.பி. (சேலம் மேற்கு), நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.